# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1777 - 2012 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.09.21

*1777 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1346 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1340 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

திருத்தம்

## உடபலாத்த பிரதேச சபை

*2012.08.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (உள்ளூராட்சி IV அ பிரிவு) அறிவித்தலுக்கேற்ப உடபலாத்த பிரதேச சபைக்கு அலுவலக அலுவல் உதவியாளர்/பாதை சுத்தம் செய்யும் தொழிலாளர், சுத்திகரிப்பாளர்களை உள்வாங்கிக் கொள்ளும் 06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்ப முடிவுத் திகதி 2012.09.15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகிறேன்.*

*பீ. சீ. த சில்வா,*
*செயலாளர்.*
*உடபலாத்த பிரதேச சபை.*

*உடபலாத்த பிரதேச சபை,*
*தெல்பிட்டிய,*
*அட்டபாகை.*
*2012, செத்தெம்பர் 03.*

*9-588*

---

## ஹங்குரங்கெத்த பிரதேச சபை

ஹங்குரங்கெத்த பிரதேச சபையின் வெற்றிடமாக காணப்படும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவினைக் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (பிரதேச சபையில் அமைந்த மற்றும் பதிலீட்டு ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்).

| *பதவி* | *பதவிகளின் எண்ணிக்கை* | *சம்பள அளவுத்திட்டம் (பொ. நி. சு.) 6/2006 IV இற்கமைய)* | *கல்வி தகைமைகள்* |
|---|---|---|---|
| வீதித் தொழிலாளி | *06* | PL*1-ரூபா 11,730-10 × 120 - 10 × 130 - 10 × 145 - 12 × 160 - ரூபா 17,600* | இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் நான்கு பாடங்களில் சித்தியும் மொத்தம் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |

**2. தேவையான ஏனைய தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல்;

(2) சீரிய நடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல்;

(3) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக 03 வருடங்கள் ஹங்குரன்கெத்த பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் பட்டியல் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவை உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

(4) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (எனினும் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியில் ஈடுபட்டுள்ள நிரந்தர ஊழியர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை பொருந்தாது)

(5) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராக இருத்தலாகாது.

(6) அரசாங்க, மாகாண அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தலாகாது.

(7) அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தர் பதவிக்கான நியமனப் பத்திரம் பொறுப்பேற்கும் இறுதி தினத்திற்கண்மித்த 05 வருட காலத்துக்குள் அனைத்து சம்பள அதிகரிப்புகளும் உரிய திகதியில் பெற்றவராகவும் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு முறை**.- பதவிகளுக்கு தகைமை மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4. **சேவையிலீடுபடுவதற்கான நிபந்தனைகள்**.-

(1) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது, விதவைகள், அநாதை, ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குதல் வேண்டும்;

(2) இப்பதவி 03 வருடகால தகுதிகாண் காலத்தைக் கொண்டது;

(3) இந்நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும் நிதிச் சட்டக் கோவையின் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண பொதுச் சேவை நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் பற்றிய கட்டளைச் சட்டங்கள், சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கும் ஹங்குரன்கெத்த பிரதேச சபையினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் உடன்பட்டு செயற்படுதல் வெண்டும்.

05. **அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்**.

06. **சேவை நிபந்தனைகள்**.:

6.1 ***பொதுவான நிபந்தனைகள்***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் I ஆம் தொகுதி II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம், 12 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு பொருத்தமானது.

6.2 ***மொழித் தேர்ச்சி***.- எல்லா உத்தியோகத்தர்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஏற்பாடுகளையும் மொழிக் கொள்கை அமுலாக்கத்தில் காலத்திற்கு காலம் அமுலாகும் சட்ட திட்டங்கள் மற்றும் அரசியல் அமைப்பையும் கடைப்பிடித்தொழுக வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2012.10.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் விதத்தில் 'செயலாளர் ஹங்குரங்கெத்த பிரதேச சபை, ஹங்குரங்கெத்த" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது அரச சேவையில்/"மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிக்கு தமது விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். மேலும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது இடையில் இங்ஙனம் ஆட்சேர்த்தலை தாமதப்படுத்தும் அல்லது மாற்றியமைக்க, திருத்தங்கள் செய்யும் பூரண அதிகாரம் ஹங்குரங்கெத்த பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவு பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை சான்றிதழ்கள் 2 ;
(இதில் 01 கிராம சேவை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.)
(5) அனுபவம் பற்றிய சான்றிதழ்.

டீ. எம். விஜேரத்ன,
செயலாளர்,
ஹங்குரங்கெத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹங்குரங்கெத்த.
2012, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஹங்குரங்கெத்த பிரதேச சபை**

மத்திய மாகாண அரசாங்க சேவையில் ஹங்குரங்கெத்த பிரதேச சபையின்
பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - 2012

1. விண்ணப்பதாரியின் பெயர் :-----.

முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.

2. நிரந்தர வதிவு மாவட்டம் :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.

7. பால் (ஆண்/பெண்) :-----.

8. விவாகமானவரா, விவாகமாகாதவரா என்பது :----.

9. இலங்கைப் பிரசையானது பிறப்பினாலா ? பதிவின் மூலமாகவா ? : -----.

10. கல்வித் தகைமை :- (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) :-

11. தொழிற் தகைமை :----.

12. சேவை அனுபவம் :----.

13. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :----.

14. நீங்கள் ஏற்கனவே இப்பிரதேச சபையில் பணி புரிவதாயின் சேவைக்காலமும் ஏனைய விபரங்களும், இப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/ தற்காலிக) :----.

இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல்கள் எதுவும் தரப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்படுமாயின் பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமையிழப்பிற்கும் பதவி நியமனத்துக்கு பின்னராயின் பணி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

திகதி :----.

......................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................ தற்போது இந்நிறுவனத்தில் .......................................... ஆக சேவையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதுடன் அவர் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) இதுவரை உள்ளாக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்தும் அதேவேளை அவரது விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்./சமர்ப்பிக்கப்படவில்லை.

-----,
திணைக்கள /நிறுவன தலைவரது
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட,
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் :----.
திகதி : -----.

9-656

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வில்கமுவ பிரதேச சபை**

துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 முதல் 126 வரையுள்ள பிரிவுகளின்படியும், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2(3) பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்டு 1988.08.23 ஆந் திகதிய 1990.04.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 520/7 ஆம் இலக்க, 607 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட துணைவிதிகளின் 1 முதல் 42 வரையுள்ள (21 ஆவது துணைவிதி தவிர்ந்த) தொகுதியை இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஏற்றுக்கொள்வதென 2012.02.28 ஆந் திகதியன்று நடைபெற்ற வில்கமுவ பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

டபிள்யூ. எம். ஜே. கே. வீரசேகர,
தலைவர்,
வில்கமுவ பிரதேச சபை.

2012.08.15.

9-469

---

**கட்டுநாயக்க சீதுவை நகர சபை**

பொது நூல் நிலையம் பற்றிய துணைவிதிகள்

*2005.02.18 ஆந் திகதிய 1281 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) இல் மாகாண சபை அறிவித்தலின்கீழ் மேல் மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின்கீழ் நகர சபைகளுக்கான பொது நூல் நிலையங்களுக்கான துணைவிதிகள் சட்டமாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேல் மாகாணத்தின் எல்லா உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய தத்துவமும் அதன்மூலம் அளிக்கப்பட்டுள்ளது.*

*அச்சொல்லப்பட்ட சட்டத்தின் துணைவிதிகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அடங்கிய துணைவிதிகளை ஆக்குவதற்கு (255 ஆம் அத்தியாயமான) நகரசபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 154 ஆம் பிரிவின் மூலம் நகரசபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மாண்புமிகு உள்ளூராட்சி அமைச்சரின் மேற்கூறப்பட்ட தத்துவத்தின்கீழ் அச்சொல்லப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நகர சபைகள் பொது நூலக துணைவிதிகளை கட்டுநாயக்க-சீதுவை பொது நூலகத்திற்குள் அமுல்படுத்த ஏற்றதென 2012.05.29 ஆந் திகதியன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சபை ஏகமனதாக நிறைவேற்றியது.*

*அதற்கமைய 2012.06.01 ஆந் திகதி தொடக்கம் அச்சொல்லப்பட்ட துணைவிதி கட்டுநாயக்க-சீதுவை பொது நூலக முறைமைக்குள் செயற்படுவதற்கு ஏற்றுக்கொண்டுள்ளதாக சகலருக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

லலன்த குணசேக்கர,
தலைவர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.
சீதுவை.
2012.06.01.

9-496

---

**மாவனெல்லை பிரதேச சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூக மண்டபத்திற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான சட்டம்*

*இங்கு அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபரினால் அவரின் பெயரின் எதிரே காட்டப்பட்டுள்ள சமூக மண்டபம், அங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நடாத்துவதற்காக, 2013 ஆம் வருடத்திற்குரிய உத்தரவுப்பத்திரமொன்றைப் பெறுவதற்காக எனக்கு*

விண்ணப்பப்பத்திரமொன்றை முன்வைத்துள்ளமையை, 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூக மண்டபத்திற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான சட்டத்தின் 6 ஆவது உறுப்புரையின் கீழ் அறிவித்தல் விடுவிக்கப்படுகின்றது.

அம்மண்டபத்திற்கு அருகில் அல்லது உத்தேசிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் வசிக்கும் யாரேனும் ஒருவர் மண்டபத்திற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து நான்கு கிழமைக்குள் எதிர்ப்புக்கான காரணங்களை காட்டி இரு பிரதிகளுடன் கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு இத்துடன் அறிவித்தல் விடுவிக்கப்படுகின்றது.

எம். எஸ். எம். காமில்,
தலைவர்,
பிரதேச சபை மாவனெல்லை.

மாவனெல்லை பிரதேச சபை,
2012.09.05.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | சமூக மண்டபத்தின் தலைவரா செயலாளரா முகாமையாளரா என்பது | சமூக மண்டபத்தின் பெயர் | சமூக மண்டபம் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் இடம் |
|---|---|---|---|
| திரு. எஸ். ஜீ. விஜேவர்தன 21/3 வளவ்வத்த, மாவனெல்லை | செயலாளர் | மாவனெல்லை, பொழுதுபோக்கு விளையாட்டு கழகம் | மாவனெல்லை ரன்கொன்திவல பிரிவு, இல. 50, பண்டாரவத்த |

9-655

---

## ஹாரிஸ்பத்து பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம், 24 (1) ஆம் விதிகளின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 24 (1) ஆம் விதியின் கீழ், மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து பிரதேச சபையினால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்து பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என வெளிப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவை சம்பந்தமாகப் பிரதேச மக்களோ அல்லது குறிப்பிட்ட காணிகளது சொந்தக்காரர்களாக உரிமை கோரும் தரப்பினரோ இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் கீழ் செயற்படும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக்கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் தொடர்பாக ஏதும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாதவிடத்து, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 25(3) ஆவது பிரிவின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்து பிரதேச சபைக்குச் சொந்தமானவையென ஏற்றுக்கொண்டு பரிபாலனம் செய்யப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆனந்த ஜயவிலால்,
தலைவர்,
ஹாரிஸ்பத்து பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹாரிஸ்பத்து.
2012.08.27.

பாதையின் பெயர் : பொல்வத்த டிங்கிரியாதெனிய பாதை;
பாதையின் ஆரம்பம் : பஹல கொண்டதெனிய நீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் அலுவலகம்
பாதையின் முடிவு : ஆர். பி. ஜி. பண்டார மெனிகேயின் வீட்டு அருகில்.

எல்லைகள் :

| இடது புறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் (அடி) | பாதையின் அகலம் (அடி) |
|---|---|---|---|
| நீர் விநியோகத் திட்டக் காணி | நீர் விநியோகத் திட்டக் காணி | 984 | 10 |
| ஜீ. எஸ். எல். பண்டாரவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | ஜீ. எஸ். எல். பண்டாரவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | |
| | எம். பி. வில்பிரட்டுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | |
| | நவரத்ன மெனிகேவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | |
| | பீ. ஜீ. முத்துபண்டாவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | |
| | கே. கனகசுந்தரிக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | |
| பாலித்தரத்னவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | | |
| ஆர். பி. ஜீ. பண்டாரமெனிகேவுக்குச் சொந்தமான மெதஹின்னவத்த | | | |

பாதையின் பெயர் : அத்தரகம காம்பரங்க எல பாதை

அத்தரகம போதொட்ட பிரதான பாதையிலிருந்து அத்தரகம சொஹொன்கொத் வரையிலான பாதையின் எஞ்சிய பகுதி.

எல்லைகள் :

| இடது புறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் (அடி) | பாதையின் அகலம் (அடி) |
|---|---|---|---|
| பீ. ஜீ. அசோக்காவுக்குச் சொந்தமான காம்பரங்க எல காணி | பீ. ஜீ. அசோக்காவுக்குச் சொந்தமான காம்பரங்க எல காணி | 1000 | 06 |
| | சுமித் பண்டார திசாநாயக்கவுக்குச் சொந்தமான கஹவத்த கும்புற எல்லை | | |
| | ஈ. எம். பீ. எஸ். கே. ஹேரத்துக்குச் சொந்தமான தொடங்கஸ்பேலே வயலும் தெல்கஹபேலே மேட்டுக் காணியும் | | |
| | ஈ. எம். பண்டாரமெனிகேவுக்குச் சொந்தமான தெல்கஹபேலே வயல் | | |
| | ஆர். எம். செனெவிரத்னவுக்குச் சொந்தமான தெல்கஹபேலே யாயே மெதபேல வயல். | | |

பாதையின் பெயர் : யட்டியலகல பரிகம பாதையில் காங்கரன்முல்ல வத்த ஊடாக சுமணதிஸ்ஸ கனிட்ட வித்தியாலயம் வரை செல்லும் அடிப்பாதை

எல்லைகள் :

| இடது புறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் (அடி) | பாதையின் அகலம் (அடி) |
|---|---|---|---|
| பீ. ஜீ. அனுலாவதிக்குச் சொந்தமான காங்கரன்முல்ல வனாத்தையும் வயலும் | கே. எம். ஜீ. சமரசிங்ஹவுக்குச் சொந்தமான காங்கரன்முல்ல வத்த | 278 | 06 |

| இடது புறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் (அடி) | பாதையின் அகலம் (அடி) |
|---|---|---|---|
| யூ. ஜீ. ஆர். வர்ணதிலகவுக்குச் சொந்தமான வயல் காங்கரன்முல்ல வயல் | கே. பி. சந்திராவுக்குச் சொந்தமான காங்கரன்முல்ல கெதர காணி | | |
| கே. ஜீ. தர்மசேனவுக்குச் சொந்தமான காங்கரன்முல்ல வயல் | | | |

*1996.4.11 வர்த்தமானியின் (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட தலபெலெல்லே மாத்தளேகெதர பாதை, மாற்றியமைப்பது தொடர்பிலான 2012.2.28 ஆந் திகதிய கடிதம் பொதுச் சபையில் முன்வைக்கப்பட்டது. மக்களது வசதி கருதி உத்தேச புதிய பாதையான கஹட்டகஸ்அங்கே வயல் ஊடாகச் செல்லும் மாத்தளேகெதர வத்த பாதையை வர்த்தமானியில் வெளியிடப் பொதுச்சபை அனுமதி வழங்கியுள்ளது.*

*603 பஸ் வழிப் பாதையில் 9 ஆம் கி. மீ. தூணின் எதிரிலிருந்து ஆரம்பமாகி அம்பகஸ்தெனிய வயல்வெளியில் முடிவடையும் பாதை*

*கஹட்டகஸ்அங்கே வயல் ஊடாக மாத்தளேகெதர வத்த பாதை.*

எல்லைகள் :

| இடது புறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் (அடி) | பாதையின் அகலம் (அடி) |
|---|---|---|---|
| ஐ. ஏ. அபேரத்னவுக்குச் சொந்தமான கஹட்டகஸ்அங்கே வயல் | ஐ. ஏ. அபேரத்னவுக்குச் சொந்தமான தந்துரயா கேனிகே வத்த | 750 | 10 |
| டபிள்யூ. டி. ரணசிங்ஹ பண்டாரவுக்குச் சொந்தமான கஹட்டகஸ்அங்கே வயல் | டி. பி. அத்தநாயக்கவுக்குச் சொந்தமான கஹட்டகஸ்அங்கே வயல் | | |
| டபிள்யூ. ஜீ. எஸ். திலகரத்னவுக்குச் சொந்தமான கஹட்டகஸ்அங்கே வயல் | ஆர். ஆர். ஜே. யசவத்திக்குச் சொந்தமான கஹட்டகஸ்அங்கே வயல் | | |

9-709

---

## *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்*

*134 (1) ஆம் பிரிவின் கீழானது*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவின்கீழ் தமன்கடுவை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையினால் கூறப்படும் பிரதேசமானது 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மாகாண சபை (நிருவாகப் பிரதேசம்) கட்டளைச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக என்னால் அங்கீகரிக்கப்பட்டது என வெளிப்படுத்துகிறேன்.*

விறாஜ் மேர்வின் பெரேரா,
உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் அலுவலகம்,
பொலன்னறுவை.

*அட்டவணை*

*பிரேரணை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு இணங்க தமன்கடுவை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் எல்லைகள் :-*

*வடக்கு.- ஹபரணை-மட்டக்களப்பு ஏ 11 வீதி (தமன்கடுவை ஹிங்குரக்கொடை பிரதேச சபைகளின் எல்லைக்குச் சமீபமாகவும்) குமுக்கன் ஆற்றின் மத்திய கோட்டு குறுக்குவெட்டுப் புள்ளியிலிருந்து குமுக்கன் ஆற்றின் மத்திய கோட்டின் வடக்குத் திசையில் பயணித்து குமுக்கன் ஆறு மற்றும் கொழும்பு-மட்டக்களப்பு பிரதான புகையிரத வீதியின் குறுக்கு வெட்டுப்புள்ளி வரை வந்து அப்புகையிரத வீதியின் மத்திய கோடு வழியாக மட்டக்களப்பு திசையை நோக்கி பயணஞ்செய்து சந்திக்கும் பராக்கிரம சமுத்திர 1 ஆம் வாய்க்கால் (குறுந்துவத்தை சந்தி) வரை வந்து 4 ஆம் வாய்க்கால் வீதியின் மத்திய கோட்டின் இடதுபக்கமாகத் திரும்பி சுமார் 500 மீற்றர் கீழ்நோக்கிச் சென்று சந்திக்கும் நோட் வாய்க்கால் வீதி என்றழைக்கப்படும் குமாரசுவாமி வாடி வீதியின் மத்திய கோடு வரையும் (இடது பக்கமாக 100 மீற்றர் சேர்த்து) அவ்விடத்திலிருந்து அக் குமாரசுவாமி வாடி வீதியின் மத்திய கோட்டிலிருந்து இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து பயணித்து பொலன்னறுவை-தம்பாளை வீதியில் சந்திக்கும் எல்பி 1 ஆம் வாய்க்கால் வீதியின் மத்திய கோட்டிற்குப் பயணித்து அவ்வாய்க்கால் வழியின் மேற்கு என்றழைக்கப்படும் வலதுபக்கமாகத் திரும்பி இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்துப் பயணித்து அவ்வாய்க்கால் வழியின் முதலாவது வயல் வாய்க்கால் வழியின் மத்திய கோட்டின் கல்கொரிய வீதி சந்திக்கும் இடம் வரை வந்து அப்பாதையில் சந்திக்கும் பிரதான வாய்க்காலின் இடது கரையின் குறுக்கு வழியின் (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) மத்திய கோட்டில் பயணஞ்செய்து மொனரதென்ன சந்திவரை சென்று அப்பாதையில் இடதுபக்கமாகத் திரும்பி (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) மத்திய கோட்டில் பயணஞ்செய்து மொனரதென்ன வீதியில் கிளை வயல் வாய்க்கால் சந்திக்கும் இடம்வரை பயணித்து அவ்வாய்க்கால் வீதியின் மத்திய கோட்டின் மேலே (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) பயணிக்கும்போது சந்திக்கும் தமன வீதி வரை சென்று வலதுபக்கமாகத் திரும்பி அந்த தமன வீதியின் மத்திய கோட்டிலிருந்து (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) சேவாகம ஒனேகம வீதி வரை.*

*கிழக்கு.- அவ்விடத்திலிருந்து அப்பிரதான வீதியின் மத்திய கோடு வழியாக வலதுபக்கம் என்றழைக்கப்படும் மேற்பக்கத்திற்கு (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) மூன்றாம் வாய்க்கால் வரை இட்டுச்செல்லும். அவ்விடத்திலிருந்து இடதுபக்கமாகத் திரும்பி அம்மூன்றாம் வாய்க்கால் வீதியின் மத்திய கோட்டிலிருந்து இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து காலிங்க எல வீதியில் கதுறுவெல-பளுகஸ்தமன பிரதான வீதி வரை வந்து அவ்விடத்திலிருந்து இடதுபக்கமாகத் திரும்பி (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) அவ்வீதியின் மத்திய கோடு வழியாக பட்டதுன வரை சென்று பட்டதுன சந்திக்கும் எல்லையின் வடிகாலின் மத்திய கோடு வரை சென்று அம்மத்திய கோட்டை மாத்திரம் முன்னோக்கி பயன்படுத்தி கல்லெலவில் (கல்லெல குளம்) அல்லது விளாங்காட்டுவில் (விளாங்காட்டு குளம்) வரை பயணித்தல் வேண்டும். அவ்வாறு பயணித்து வில் என்றழைக்கப்படும் வில்லுவின் வெள்ளப்பெருக்கு பிரதேச எல்லைகளான 182 நெலும்வில, 187 கல்லெல, 187 கல்லெல மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளின் கிழக்கு எல்லைக்குச் சென்று ஹபரணை-மட்டக்களப்பு ஏ 11 பிரதான வீதியின் கொட்டலிய மதகு என்றழைக்கப்படும் பாலம் வரை.*

*தெற்கு.- அவ்விடத்திலிருந்து அந்த கொட்டலிய வாய்க்கால் வழியின் மத்திய கோட்டின் மேற்காக அம்பன் கங்கை வரை பயணிக்கையில் சந்திக்கும் அளுத்வெவ மடை நீர் வாய்க்கால் என்றழைக்கப்படும் வடிகால் ஸ்தானம் வரை சென்று அவ்வாய்க்கால் வழியின் மேற்காக அளுத்வெவ வடிகால் அணை வரை சென்று அவ்வடிகால் வழியின் மத்திய கோட்டில் இடதுபக்கமாகத் திரும்பி (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) ரணவிரு மாவத்தையின் மத்திய கோடு வழியாக பயணித்து ஆர்பி 1 ஆம் வாய்க்கால்வரை சென்று அவ்வாய்க்கால் கரை அணை வீதியின் மத்திய கோட்டின் (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) கணங்கொல்ல சந்தி வரை சென்று அவ்விடத்திலிருந்து இடதுபக்கமாகத் திரும்பி கணங்கொல்ல வீதியின் மத்திய கோட்டின் (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) சென்று சந்திக்கும் வயல்வெளிப் பாதையில் வலதுபக்கமாகத் திரும்பி அவ்விடத்தின் மத்திய கோடு வழியாக (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) பராக்கிரம சமுத்திரக் குளக்கரை அணையின் கொளங்கஹ சந்திவரை (களஹகல புதிய நகர வீதி சந்தியிலுள்ள புத்தர் சிலை அருகிலிருந்து 1 கி. மு. வரையான ஸ்தானம்).*

*மேற்கு.- அவ்விடத்திலிருந்து அக்குளக்கரை அணையின் கொலொங்கொஸ் சந்தியிலிருந்து வலதுபுறத்தில் குளம் நீரில் மூழ்கும் எல்லை என்றழைக்கப்படும் குளத்து மடை நீர் வெளியேறும் எல்லை வழியாக (மாஓய பாதையின் ஏ 11 வீதியிலிருந்து 14 கி. மீ. சேர்த்து) குளத்தின் பிளவு (கடகரய) வரை சென்று அவ்விடத்திலிருந்து மாஓய கடவலவெவ வீதி சந்தியின் கடவலவெவ வீதியின் மத்திய கோடு வழியாக (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) கடவலவெவ பக்கமாகச் சென்று சந்திக்கும் ஜனபதகம வீதிக்குச் சென்று அவ்வீதியின் மத்திய கோட்டிலிருந்து இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து கடவலவெவ மயான நாற்சந்தி வரை சென்று அவ்விடத்திலிருந்து வலதுபக்கமாகத் திரும்பி அவ்வீதியின் மத்திய கோட்டின் (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) சுமார் 100 மீற்றர் முன்னே சென்று சந்திக்கும் கடவலவெவ பிரதான வீதிக்குச் சென்று அங்கு காணப்படும் குடியேற்றக் காணி 1493 இன்மேல் எல்லைவரை சென்று இடதுபக்கமாகச் சந்திக்கும் டீ 2/6 வாய்க்கால் பாதையின் மத்திய கோட்டிற்கு (இடதுபக்கமாக 100 மீற்றர் சேர்த்து) கீழ்பக்கமாய்ச் சென்று சந்திக்கும் இடதுபக்க கிளை வாய்க்கால் பாதையில் இடதுபக்கமாகத் திரும்பி வயல்வெளி மத்தியில் முடிவுறும் (நெற்காணி ஊடாக) வீதியின் குடியேற்றக் காணி 1401 இன் எல்லை அருகில் 23 ஆம் மைல்கல் கடவல வீதிக்குச் சென்று அவ்வீதியின் வலதுபக்கத்தில் காணப்படும் நீர்த்தாங்கியின் முன்னால் உள்ள வீதியின் நிக்கவெவ காமினி வித்தியாலய வீதி மத்திய கோட்டிற்குச் சென்று அவ்வீதியில் முன்னால் சென்று ஏ 11 ஹபரணை-மட்டக்களப்பு பிரதான வீதியில் பிரவேசித்து அவ்வீதியின் மத்திய கோட்டின் ஆரம்பப் புள்ளியான குமுக்கன் ஆற்று பாலம் வரையான எல்லைகளுக்குட்பட்ட பீஓ/ரீகே 2008/35 நில அளவை மாதிரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிலப்பிரதேசத்தை அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவது பொருத்தமானதென கௌரவ தலைவர் பிரேமசிரி முனசிங்க அவர்களினால் முன்மொழியப்பட்டது.*

*9-499*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.